ஜனவரி – 2016

ISBN - 978-955-53117-3-1

இன்றைய உலகம்

பொது அறிவு (G.K) சமகால விடயங்கள்

பக்கங்கள் : 12

இதழ் – 01

விலை : 30/-

ஆக்கியோன் : P. உமாசங்கர் – தொழில்நுட்பக்கல்லூரி மருதானை. கொழும்பு-10.

வாசக நெஞ்சங்களுக்கு.....!

பொது அறிவு (G.K) சமகால விடயங்கள் எனும் இம் முதலாவது இதழினூடாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1. இலங்கை

★ 1992

- 2015 டிசம்பரில் விலங்குகளின் தாக்குதல் மற்றும் அபாய நிலைமைகளின் போது 1992 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்தி வனப்பாதுகாப்பு திணைக்கள அதிகாரிக்கு அறிவிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- பெருந்தோட்டப்பகுதிகளில் சிறுத்தை, எருமை மாடுகளின் தாக்குதல்கள் மற்றும் குளவிக் கொட்டிலிருந்து தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்கும் நோக்கிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- 2015ம் ஆண்டில் 564 குளவிக் கொட்டு சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டிருப்பதுடன் 03 பேர் மரணமடைந்துள்ளனர்.

★ அமைச்சுப் பெயர் மாற்றம்

- 2015 டிசம்பரில் 1945/40 ம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் படி தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சு 'தேசிய சகவாழ்வு மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சு' என மாற்றம் பெற்றது.
- இதன் அமைச்சர் மனோ கணேசன் அவர்களாவார்.

★ இலங்கையின் எதிர்கால செயற்திட்டங்கள்

- புகை பொருட்களின் ஊடாக ஏற்படுகின்ற புற்று நோயை தடுக்கும் அரசாங்கத்தின் நோக்கமாக 2020 இல் புகையிலை உற்பத்திக்கு தடைவிதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- தற்போது இருக்கின்ற 29 சதவீதமான மழைவீழ்ச்சியை 32 சதவீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

★ க.பொ.த உயர்தரப் பரீட்சை - 2015

- 2016 ஜனவரியில் வெளியான க. பொ. த உயர்தரப்பரீட்சை 2015 இன் பிரகாரம் 5960 பாடசாலைப் பரீட்சார்த்திகள் உள்ளடங்கலாக 6547 பேர் மூன்று பாடங்களிலும் அதிவிசேட (A) தரச் சித்தி பெற்றுள்ளனர்
- இப் பரீட்சையில் 309,069 பேர் தோற்றியதுடன் 236,072 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் என்பதுடன் 72, 997 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆவார்.

★ க. பொ. த. உயர்தரப் பரீட்சை - 2015

- க.பொ.த உயர்தரப் பரீட்சை 2015 முடிவுகளின் பிரகாரம் மாவட்ட ரீதியில் யாழ்ப்பாண மாவட்டமும், மாகாண ரீதியில் வட மாகாணமும் முதலிடம் பெற்றுள்ளன.
- வடக்கு மாகாணம் 65.23 சதவீத சித்திகளைப் பெற்றுள்ள தோடு, மாவட்ட ரீதியில் யாழ்ப்பாண மாவட்டம் 66.32 சதவீத சித்திகளையும் பெற்றுள்ளது
- இதன் பிரகாரம் ஆகக் குறைந்த நிலையில் வடமத்திய மாகாணம் 57.56 சதவீத சித்திகளையும், பொலநறுவை மாவட்டம் 57.76 சதவீத சித்திகளையும் பெற்றுள்ளன.

★ 2016 இல் முதலாந்தர அனுமதி

- 2016ம் ஆண்டு முதல் முதலாம் தரத்தில் வகுப்பொன்றுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 40 ஆக இருக்க வேண்டுமென 2015 டிசம்பரில் விசேட சுற்றறிக்கை மூலம் கல்வி அமைச்சின் செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- முதலாம் தரத்தில் வகுப்பு ஒன்றுக்கு சேர்ந்து கொள்ளப்படும் மாணவர் களின் எண்ணிக்கை, 35 ஆக இருக்க வேண்டுமென கல்வி அமைச்சின் செயலாளருக்கு உயர் நீதி மன்றம் முன்னதாக உத்தர விட்டிருந்தது.
- 2016 ம் ஆண்டு மட்டும் 40 என்ற எண்ணிக்கை இருக்க வேண்டு மென்றும் அதற்குப் பின்னர் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொரு மாணவர் என்ற வீதம் குறைத்து 2021ம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கையை 35 ஆகக் குறைக்க வேண்டும் எனவும் அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ ஸ்ரமிக்க சுரெக்கும

- 2016 ஜனவரி மாதத்தில் 'ஸ்ரமிக்க சுரெக்கும' எனப்படும் புலம் பெயர் தொழிலாளர் குடும்ப நலனோம்பல் வேலைத்திட்டம் சகல பிரதேச செயலகங்களிலும் இடம் பெற்றது.
- உங்கள் குடும்பத்தில் எவரேனும் வெளிநாட்டில் தொழில் புரிவதாயின் உங்கள் குடும்பத்தின் பின்வரும் தகவல்கள் பிரதேச செயலகத்தில்

உள்ள அபிவிருத்தி உத்தி யோகத்தரிடம் கையளிக்கப்பட வேண்டும்

- வெளிநாடு சென்றுள்ள உறவினரின் தகவல்கள்
- பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வி விபரங்கள்
- உங்கள் குடும்ப வாழ்வாதார விபரங்கள்
- சுகாதார மட்டம்

- இச் செயற்திட்டத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சும் செயற்படுகின்றது.

★ Sri Lanka Next

- உலக வெப்பமயமாதல் உயர்வை 2 டிகிரி செல்சியசால்குறைப்பதற்கு உலக தலைவர்கள் இணக்கப்பாட்டினை வெளியிட்ட Cop21 சம்மேளனத்தின் நோக்கதினை நிறைவேற்றிடும் இலங்கையின் பங்களிப்பை வழங்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும் நீண்ட காலத்திட்டமே Srilanka Next ஆகும்.
- இது 2016 ஜனவரி மாதம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதுடன் இச் செயற்றிட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சி னால் செயற்படுத்தப்படுகிறது.
- இது நீலப் பசுமை புரட்சி எனவும் அழைக்கப்படுகிறது.

★ 2015ம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு

- 2015ம் ஆண்டிற்கான இலங்கையின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 15,421,202 பேர் ஆகும்.
- நாட்டின் அதிக வேட்பாளர்கள் கம்பஹா மாவட்டத்திலேயே (1,681,887 பேர்) உள்ளனர் எனவும், குறைந்த வேட்பாளர்கள் வன்னி தேர்தல் மாவட்டத்திலேயே (263,201 பேர்) உள்ளனர் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

★ ஸ்ரீ லங்கா ரெலிகொம் ஆண்டு நிறைவு

- ஸ்ரீ லங்கா ரெலி கொம் நிறுவனத்தினால் கடலுக்கடியிலான கேபிள்கள் மூலம் விரைவான இணையத்தள சேவைகளை வழங்கும் நிகழ்வும், ரெலிகொம் நிறுவனத்தின் 150 ஆண்டு விழாவும் 2016 ஜனவரியில் நடைபெற்றது.
- உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக எமது நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறையை முன்னேற்றுவதே அரசின் கொள்கை யாகும்.
- அரசின் புதிய கொள்கைகளை நிறைவேற்றவும். தகவல் தொழில் நுட்பத்துறையில் வளர்ச்சியை முதன்மைப்படுத்தியே டிஜிட்டல் அமைச்சு ஏற்படுத்தப்பட்டது.

★ இலங்கையின் மிகப் பெரிய தானியக் களஞ்சியம்

- மொனராகல புத்தல பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கைத்தொழில் குடியேற்றத்தில் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப் பட்டுள்ள நாட்டிலேயே மிக பெரிய தானிய களஞ்சியசாலை கட்டிடதொகுதி 2016 ஜனவரியில் திறந்து வைக்கப்பட்டது.
- இந்நாட்டு விவசாய மக்களின் பொருளாதார பாதுகாப்பை வலுப்படுத்தவும், மேலதிக உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கான பாதுகாப்பு சுற்றாடலை உருவாக்கும் நோக்கிலேயே இக் களஞ்சிய சாலை உருவாக்கப்பட்டது.
- இக்களஞ்சிய சாலையை நிர்மாணிக்கவென உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் அரசாங்கத்தின் 260 மில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது.

2. உலகம்

★ உலகிலே வாழ்வதற்கு சிறந்த நாடு நோர்வே

- 2015 டிசம்பரில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள மனித அபிவிருத்தி சுட்டெண்ணை அடிப் படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள மதிப்பீட்டிலே உலகிலே வாழ்வதற்கு சிறந்த நாடாக நோர்வே தெரிவு செய்யப்பட்டுள்ளது.
- நேர்வேக்கு அடுத்து வாழ்வதற்கு சிறந்த நாடுகள் வரிசையில் முதல் ஐந்து இடங்களை பெற்ற நாடுகளாக அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து, ஜேர்மனி என்பன விளங்குகின்றன.
- 188 நாடுகளை உள்ளடங்கிய பட்டியலில் உலகில் வாழ்வதற்கு மோசமான மூன்று நாடுகளாவன நைகர், மத்திய ஆபிரிக்க குடியரசு, எரித்திரியா என்பனவாகும் .

★ பிரபஞ்ச அழகி Miss Universe

- 2015 டிசம்பரில் லாஸ் வெகாஸில் இடம்பெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டியில் பிலிப்பைஸை சேர்ந்த பியோ அஸோன் ஸோ பிரபஞ்ச அழகியாக் தெரிவு செய்யப்பட்டார்.
- ஆரம்பத்தில் கொலம்பியாவை சேர்ந்த அரியட்னா குட்டியெரஸே வென்றாதாக தவறாக அறிவிப்பாளரால் அறிவிக்கப்பட்டதால் கிரிடம் சூடப்பட்டு பின்னர் மாற்றப்பட்டது.
- மேற்படி 64 வது பிரபஞ்ச அழகு ராணிப் போட்டியில் 80 போட்டி யாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

★ சிம்பாப்பேயின் நாணய அலகு

- 2015 டிசம்பரில் சிம்பாப்பேயின் அங்கீகரிக்கப்பட்ட நாணய அலகாக

சீன நாணய அலகான யுவான் ரன்மென்பீயை ஏற்றுக் கொள்வதற்கு சிம்பாப்பே தீர்மானித்துள்ளது.

- சீனாவுக்கு வழங்க வேண்டியுள்ள 40 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இல்லாது செய்வதற்காக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மனித உரிமைகள் மீறல் காரணமாக மேற்குலகால் புறக்கணிக்கப் பட்டுள்ள சிம்பாப்பேயின் மிகப் பெரிய முதலீட்டாளராக சீனா மாறி யுள்ளது. எனினும் 1999 தொடக்கம் 2008ம் ஆண்டுவரை ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு அந்நாடு தடுமாறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

★ ஒரு மில்லியன் குடியேற்ற வாசிகள் ஐரோப்பாவுக்குள் நுழைவு

- 2015ம் ஆண்டில் ஐரோப்பவிற்குள் பின்வரும் வழிகள் மூலமாக ஒரு மில்லியன் குடியேற்ற வாசிகள் நுழைந்ததுடன் அவர்கள் கீழ் தரப் பட்டவாறு இடம் பெயர்ந்து இருந்தனர்.
  - கடல்வழி - 972,551
  - தரைவழி - 34,000
  - மொத்தம் - 10,06,551
  - கடலில் மரணமடைந்தோர் - 3965

  இடம் பெயர்ந்த நாடுகள்

• சிரியா	-	49%	எரிந்திரியா	-	4%
சோமலியா	-	2%	மாலி	-	1%
ஆப்கானிஸ்தான்	-	21%	பலஸ்தீனம்	-	2%
சூடான்	-	1%	ஈரான்	-	8%
நைஜீரியா	-	2%	சாம்பியா	-	1%

★ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவி

- ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பதவிக்காலம் 2016 டிசம்பரில் முடிவடைய உள்ளதால் புதிய பொதுச் செயலாளரை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் 2016 ஜூலையில் ஆரம்பிக்கப்பட உள்ளன.
- கடந்த எழுபது வருடங்களாக பதவி வகித்த அனைத்து ஐ.நா பொதுச் செயலாளர்களும் ஆண்கள் என்பதால் பெண்களை பரிந்துரைப் பதற்கு பரீசீலிக்குமாறு விசேடமாக கோரப்பட்டுள்ளது.
- வழமையாக பிராந்திய அடிப்படையில் சுழற்சி முறையிலேயே பொதுச் செயலளார் பதவி தேர்வு செய்யப்பட்டு வருகிறது இதன் பிரகாரம் அடுத்து கிழக்கு ஐரோப்பாவை சேர்ந்த ஒருவரே அந்த பதவிக்கு தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

★ உயரமான செயற்கை நீர்வீழ்ச்சி

- 2016 ஜனவரியில் சீனாவானது அவசரகால நிலைமைகளின் போது தூய நீரைப் பெறுவதற்காக மனிதரால் உருவாக்கப்பட்டுள்ள 1300 அடி உயரமான செயற்கை நீர் வீழ்ச்சியை திறந்த வைத்துள்ளது.
- சீனாவின் யுனான் மாகாணத்தில் கன்மிங் நகரில் 1.1 மில்லியன் சீன யுவான் செலவில் இந்த செயற்கை நீர் வீழ்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது.

★ உலகிலேயே அதிக விலை மதிப்புள்ள மாணிக்ககல்

- 2015ம் வருடத்தில் இரத்தினபுரி மற்றும் ஹட்டன் பிரதேசத்திற்கு இடையில் கண்டெடுக்கப்பட்டதே தற்போது உலகிலேயே அதிக விலை மதிப்புள்ள மாணிக்ககல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நீலக்கல் ரகத்தை சேர்ந்த இம் மாணிக்ககல் 1404.49 கரட் எடையுடைய துடன் இதன் பெறுமதி 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமானது என இரத்தினக்கல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.
- இதற்கு முன்னர் கண்டெடுக்கப்பட்ட 1395 கரட் எடையுள்ள மாணிக்க கல்லே இதுவரை காலமும் உலகில் அதிக விலை மதிப்புள்ளதாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

3. விளையாட்டு

★ பீபாவின் (fifa) செப்பிளட்டர்

- 2015ம் ஆண்டின் இறுதியில் உலகின் மிகப்பெரிய கூட்டமைப்பாக விளங்கும் பீபாவின் தலைமைகள் உலகக் கிண்ண போட்டியை நடாத்தும் நாடுகளை தெரிவு செய்தல், தொலைக்காட்சி உரிமை வழங்குதல், போன்றவற்றில் பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாக கருதி விசாரணைகள் நடைபெற்றன.
- ஐந்தாவது முறையாகவும் பீபாவின் தலைமைப்பதவியை வகித்து தொடர்ச்சியாக ஏற்பட்ட புகார் காரணமாக அதனை தொடர முடியாமல் பதவி விலகிய செப் பிளட்டர் தற்போது நடைபெற்ற விசாரணைகளை அடுத்து இவருக்கு பீபா தலைவருக்கான போட்டியில் பங்கேற்க முடியாதவாறு 8 ஆண்டுகள் தடையை பீபா அமைப்பின் ஊழல் குறித்து விசாரித்த நன்னடத்தை குழு அறிவித்துள்ளது.

★ அதிக டெஸ்ட் போட்டிகளில் தோல்வியடைந்த அணி

- 2015ம் ஆண்டில் இலங்கை அணி மொத்தம் 11 டெஸ்களில் விளை யாடி அதில் நான்கில் வெற்றி பெற்றதுடன் எந்த போட்டியும் சமநிலை யில் முடிவடையவில்லை.
- இதன் பிரகாரம் இலங்கை அணி 2015ம் ஆண்டில் மொத்தம் ஒரு டெஸ்ட் போட்டிகளில் தோற்று ஓர் ஆண்டுக்குள் இலங்கை அணி அதிக தோல்விகளை சந்தித்த சந்தரப்பமாக அமைந்துள்ளது.

★ 2015 ஆண்டிற்கான சர்வதேச கிரிக்கட் சபையின் விருதுகள்

- 2015 டிசம்பரில் 2015ம் ஆண்டிற்கான சர்வதேச கிரிக்கட் சபையின் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவையாவன

- சிறந்த கிரிக்கட் வீரர் - ஸ்டீவன் ஸ்மித் - அவுஸ்திரேலியா
- சிறந்த டெஸ்ட் கிரிக்கட் வீரர் - ஸ்டீவன் ஸ்மித் - அவுஸ்திரேலியா
- ஒரு நாள் போட்டி சிறந்த வீரர் - ஏ. பி. டீ வில்லியர்ஸ் - தென்னாபிரிக்கா
- ஒரு நாள் போட்டி சிறந்த வீராங்கனை - மெக் லனிங் - அவுஸ்திரேலியா
- இருபதுக்கு 20 சர்வதேச போட்டி சிறந்த வீராங்கனை - ஸடஃபனி டெய்லர் - மேற்கிந்திய தீவுகள்
- இருபதுக்கு 20 சிறந்த பெறுபேறு - ஃபப்டு பிளெஸிஸ் - தென்னாபிரிக்கா
- வளர்ந்து வரும் சிறந்த வீரர் - ஜொஷ் ஹேஸல்வூட் - அவுஸ்திரேலியா
- உப அங்கத்துவ நாட்டு சிறந்த வீரர் - குர்றாம் கான்
- சிறந்த விளையாட்டு உணர்வுக்கான விருது பிரென்டன் மக்கலம்
- சிறந்த நடுவர் - றிச்சர்ட் கெட்டல் புரோ

★ பீபா தங்கப்பந்து விருது

- 2016 ஜனவரியில் 2015ம் ஆண்டுக்கான சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தங்கப்பந்து (பாலோன் டி ஓர் விருது) வழங்கப் பட்டது.
- இவ் விருதை பார்ஸிலோனா கழகத்தின் வீரரான ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த லியனொல் மெஸ்ஸி வெற்றி பெற்றார்.
- தற்போது 41.33 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றதுடன். இது அவரது ஐந்தாவது தடவை வெற்றி விருதாகும்.

★ விளையாட்டு மற்றும் சரீர ஆரோக்கிய மேம்படுத்தல் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

- விளையாட்டு மற்றும் சரீர ஆரோக்கியத்தை பிரபல்யமாக்கல் விளையாட்டுத் துறையில் திறமையுள்ள மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களை வெளிக்கொண்டு வருதல். ஆரோக்கியமான வாழ்க்கை வாழ விளையாட்டில் ஈடுபடுத்தல் மற்றும் விளையாட்டு என்னும் தலைப்பை மென்மேலும் சிறந்த அர்த்தத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 2016 ஜனவரியில் நடைமுறைபடுத்தப்பட்டது.
- இது விளையாட்டுத்துறை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

4. மருத்துவ விஞ்ஞான தொழிநுட்பம்

★ ஆவர்த்தன அட்டவணையில் புதிய மூலகங்கள்

- 2015 டிசம்பரில் ஆவர்த்தன அட்டவணையில் ரஷ்யா மற்றும் அமெரிக்க இரசாயன குழு ஒன்று புதிதாக கண்டறிந்த நான்கு இரசாயன (115,117,118,113) மூலகங்களை இணைத்தன் மூலம் இந்த அட்டவணையின் ஏழாவது வரிசை பூர்த்தியாகி உள்ளது.
- அமெரிக்காவை மையமாக கொண்டு செயற்படும் இரசாயன அளவீட்டு முறைகளை நிர்வகிக்கும் சர்வதேச தூய மற்றும் பயன்பாட்டு இரசாயன வியல் ஒன்றியத்தினால் IUPAC (Informational Union of Pure And Appllied Chemistry) இந் நான்கு மூலகங்களும் உறுதி செய்யப்பட்டன.
- 2011ம் ஆண்டு 114 மற்றும் 116 மூலகங்கள் இணைக்கப்பட்ட பின்னர் ஆவர்த்தன அட்டவணையில் புதிய மூலகங்கள் சேர்க்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ரஷ்யாவின் இரசாயன விஞ்ஞானி டிமிட்ரி மெடலீவ் 1869ம் ஆண்டு இரசாயன மூலகங்களை அவற்றின் பண்புகளின் அடிப்படையில் வரிசைப்படுத்த முயன்று மூலகங்களின் அணு நிறைகளை அடிப்படையாகக் கொண்டு முதலாவது ஆவர்த்தன அட்டவணையை உருவாக்கினார்.

★ எச். ஐ. வி எயிட்ஸ் : இலங்கையும் உலகமும்

- 1981 இல் அமெரிக்காவில் எச். ஐ. வி தொற்றுக்குள்ளான உலகின் முதலாவது நபரையும், 1989 இல் இலங்கையரும் எச். ஐ வி தொற்றியவர்களாக இனங் காணப்பட்டனர்.
- 164 நாடுகளின், உலக எயிட்ஸ் தர வரிசைப்பட்டியலில் இந்தியா, கென்யா, மற்றும் அமெரிக்கா ஆகியன முதல் மூன்று இடங்களிலும், இலங்கை 127 வது இடத்திலும் இருக்கிறது.
- உலகளவில் 39.9 மில்லியன் பேரும் இவங்கையில் 15 வயதுக்கு மேற்பட்ட 3200 பேரும் 15 வயதுக்கும் குறைந்த 100 பேரும் எச். ஐ. வி தொற்றோடு வாழ்வதாக மதிப்பட்டுள்ளது.
- இது வரை உலகளவில் 34 மில்லியன் பேரும், இலங்கையில் 357 பேரும் எயிட்ஸினால் இறந்துள்ளனர்.
- தாய் சேய் எச். ஐ. வி தொற்று கணிசமாக குறைவடைந்து வருவதோடு 2015 இல் இதனை பூச்சியமாக்கிய முதலாவது நாடாக கியூபா பெயரிடப்பட்டுள்ளது.

5. விண்வெளி

★ இலங்கை கோள் மண்டலம்

- 2015ம் ஆண்டில் இலங்கை கோள் மண்டலம் 50 வருடங்கள் நிறைவை கொண்டாடியது.
- 1965 ம் ஆண்டில் கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் நடாத்தப்பட்ட கைத்தொழில் கண்காட்சியின் ஓர் அங்கமாக எமது கோள் மண்டலம் நிர்மாணிக்கப்பட்டது.
- இலங்கையின் அன்றைய பிரபல பொறியியளாலராக விளங்கிய கலாநிதி ஏ. என். எஸ் குலசிங்கவே இதன் ஸ்தாபகராவார்.
- இலங்கை கோள் மண்டலத்தின் இடைவிட்டம் 23 மீற்றர்களாகும். இங்கு சுமார் 550 ஆசனங்கள் உள்ளன.
- கோள் மண்டலத்தில் 1965 முதல் பயன்படுத்தப்படுகின்ற விண்வெளி காட்டியும். டிஜிட்டல் பூகோள தொலைகாட்டியும் ஜேர்மன் நாட்டின் கார்ள் சைஸ் கம்பனிக்கு சொந்தமானதாகும்.
- உலகில் தற்போது 4000 கோள் மண்டலங்கள் உள்ளன.
- இலங்கையருக்கு விண்வெளி மற்றும் பிரபஞ்சம் தொடர்பான சிறந்த தெளிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக் கொடுப்பதே கோள் மண்டலத்தின் பிரதான நோக்கமாகும் எனினும் வானசாஸ்திர அறிவு மிக்கவர்களை இந்நாட்டில் உருவாக்குவதே இதன் இறுதி இலக்காகும்.

6. சுற்றாடல் சடுகவியல்

★ UN COPUOS

- விண்வெளி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அமைப்பு UN COPUOS
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிக்கான விண்வெளியை பயன் படுத்துவது தொடர்பான குழு (UN COPUOS) இல் 2015 ஒக்டோபரில் கூடிய ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் நான்காவது குழு அமர்வில் இலங்கை உட்பட ஐந்து நாடுகளுக்கு உறுப்புரிமை வழங்க அங்கீகாரம் அளிக்கப்பட்டது.
- இலங்கையில் விண்வெளி தொடர்பான தொழில் நுட்பத்தை பயன் படுத்தும் தேசிய மையமாக விளங்கும் நவீன தொழில் நுட்பங்களுக் கான ஆதர் சி. கிளார்க் நிலையமே இவ் உறுப்புரிமையை பெற்றுக் கொள்வதற்கான ஆரம்ப நடிவடிக்கைகளை மேற்கொண்டது.
- இதன் மூலம் விண்வெளி தொடர்பான சர்வதேச மட்டக் கொள்கை கள், ஒழுங்குபடுத்தல் தொடர்பான சட்ட நடிவடிக்கைகள், தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்வதற்கு இலங்கை உயர்மட்ட செயற்பாடளராக செயற்பட வாய்ப்பு கிடைத்துள்ளது.

★ சிகா வைரஸ்

- 1947ம் ஆண்டு உகண்டாவில் குரங்கொன்றில் முதன்முதலாக சிகா வைரஸ் அடையாளம் காணப்பட்டது.
- 2015 மேயில் தென் அமெரிக்காவில் பிரேசிலில் மேற்படி வைரஸ் தாக்கம் அடையாளம் காணப்பட்டதுடன், தற்போது மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது.
- நுளம்புகளால் பரப்பப்படும் இந்த வைரஸால் பாதிக்கப்படுபவர்களில் பலருக்கு நோய் அறிகுறி தென்படாத போதும் இது குழந்தைகள் குறைபாடுகளுடன் பிறப்பதுடன் தொடர்புபட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.
- உலக சுகாதார ஸ்தாபன அறிக்கையின் பிரகாரம் பிரேசிலில் 500 000 க்கும் 1.5 மில்லியனுக்கும் இடைப்பட்டோர் இவ் வைரஸ் தொற்றுக்கு உள்ளானதுடன், இப் பிராந்தியத்தில் 20 க்கு மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது.

★ உலகின் கணைய மாற்று சிகிச்சை

- 2016 ஜனவரியில் உலகின் கணைய மாற்று சிகிச்சைக்கு உட்பட்ட முதலாவது நபர் என்ற பெயரை பிரித்தானியாவின் ஸு யோர்க் பெறுகின்றார்.
- இவர் நீரிழிவு மற்றும் நீடில் போபியா நோய் பாதிப்புக்கு உள்ளாகி இருந்ததுடன் இச்சிகிச்சை மான் செஸ்டர் ரோயல் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது.

7. சினிமா

★ கோல்டன் குளோப் விருது

- 2016 ஜனவரியில் 73 வது கோல்டன் குளோப் விருது அமெரிக்காவின் கலிபோர்ணியாவில் இடம்பெற்றது.
- இதில் 2015ம் ஆண்டு திரைக்கு வந்த சிறந்த திரைப்படங்கள் மற்றும் சிறந்த தொலைக்காட்சி தொடர்களுக்கான விருதுகள் அறிவிக்கப் பட்டன.
- இவ் விருது விழாவில் சிறந்த திடைப்படத்திற்கான விருதை தி. ரெவனென்ட் திரைப்படமும் சிறந்த இயக்குனருக்கான விருதை தி ரெவனென்ட் திரைப்படத்தை இயக்கிய அலி ஜான்ட்ரோவுக்கும். சிறந்த நடிகருக்கான விருதை தி ரெவனன்ட் திரைப்பட நடிகர் லியானார்டோ டிகாப்ரி யாவும் பெற்றனர்.
- ஒஸ்கர் விருதுக்கு அடுத்த படியாக மிகவும் உயரிய விருதாக கருதப் படுவதே இவ்விருதாகும்.

8. சர்வதேசம்

★ சர்வதேச நாணய நிதிய கடன்

- 2015 ஜூலையில் சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்க வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறிய முதலாவது அபிவிருத்தி அடைந்த நாடாக கிரேக்கம் பதிவானது.
- 71 ஆண்டுகள் சர்வதேச நாணய நிதிய வரலாற்றில் இவ்வாறு நிகழ்ந்தது இதுவே முதல் முறை ஆகும்.

★ இலங்கை - பாகிஸ்தான் ஒப்பந்தங்கள்

- 2016 ஜனவரியில் பாக்கிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரிப் இரண்டு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு வருகை தந்தார்.
- இதன் பிரகாரம் இரு தரப்பினரும் பின்வரும் எட்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தனர்
  - விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு
  - சுகாதாரத்துறை ஒத்துழைப்பு
  - பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் நிதி மோசடி தொடர்பான நிதிப் புலனாய்வு பரிமாற்ற ஒத்துழைப்பு
  - கலாசார ஒத்துழைப்பு
  - வர்த்தக ஒத்துழைப்பு
  - புள்ளி விபரவியல் தரவுகளை பகிர்ந்து கொள்ளுதல் தொடர்பான ஒத்துழைப்பு
  - இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான ஒத்துழைப்பு.

★ அணுகுண்டும் வடகொரியாவும்

- 2016 ஜனவரியில் ஐதரசன் அணுகுண்டுச் சோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.
- வரலாற்று ரீதியான ஐதரசன் குண்டின் கச்சிதமான வெற்றியுடன் முன்னேற்றமடைந்த அணுகுண்டு தேசங்களுடன் வடகொரியாவும் இணைந்து கொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இச் சோதனை அறிவிப்பை அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கடுமையாக கண்டித்ததுடன், ஐநா. பாதுகாப்பு சபையும் ஆராய்ந்துள்ளது.
- இதனால் வடகொரியாவின் புன்கியிரி அணு சோதனை தளத்திற்கு அருகில் 5.1 ரிச்டர் அளவு பூகம்பம் ஒன்று பதிவாகி உள்ளது.

★ துப்பாக்கி கட்டுப்பாடு

- 2016 ஜனவரியில் அமெரிக்க காங்கிரஸின் எதிர்ப்பையும் மீறி, துப்பாக்கிகளால் ஏற்படுத்தப்படும் வன்முறைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய நடைமுறைகளை ஜனாதிபதி பாராக் ஒபாமா அறிமுகப்படுத்தி உள்ளார்.
- 2001ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை அமெரிக்க மண்ணில் வைத்து துப்பாக்கிளால் ஏற்படுத்தப்பட்ட உயிரிழப்புக்கள் 406,496 ஆகும்.

பொது அறிவு

1. 2016 ஜனவரியில் மோசமான பனிப்புயலினால் ஆகக் குறைந்தது 19 பேர் பலியான நாடு எது?

2. இந்தியாவின் எத்தனையாவது குடியரசு தினம் 2016-01-26 இல் கொண்டாடப்பட்டது?

3. சர்வதேச சுங்க தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?

4. 2016 ஜனவரியில் தமிழ் நாட்டில் நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட எவ்விளையாட்டிற்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்தது?

5. 2016 ஜனவரியில் புதிய ஆடைத் தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்ட இடம் எது?

நுண்ணறிவு

1. சேகரின் மேசை லாச்சியில் 53 காலுறைகள் உண்டு. முற்றிலும் ஒரே மாதிரியான 15 கறுப்பு மற்றும் முற்றிலும் ஒரே மாதிரியான 17 சிவப்பு நிறமுடையன. மின்சாரம் துண்டிக்கப்பட்ட போது அவன் இருட்டில் இருந்தான். நூற்றுக்கு நூறு கறுப்பு நிற சோடி காலுறைகளை ஏற்படுத்து வதற்கு எத்தனை காலுறைகள் எடுக்கப்பட வேண்டும்.

2. குறித்த மாதத்தின் 10 ம் திகதி ஞாயிற்றுக்கிழமையில் இருந்து மூன்று நாள் முன்பதாகவரின் குறிப்பிட்ட மாதத்தின் 2ம் திகதி எந்த நாளில் வரும்?

3. எண் ஒன்றின் 30% உடன் 20 ஐக் கூட்டிப் பெறப்படும் தொகையானது 500 இன் 32% இல் இருந்து 20 ஐக் கழிக்கவரும் தொகையாகும். அவ்வெண் யாது?

4. 49 மாணவர்கள் கொண்ட ஒரு வகுப்பில் முதல் மாணவனில் இருந்து 16ம் நிலையில் குமரன் இருக்கிறான். இறுதி மாணவனில் இருந்து குமரனுடைய நிலை என்ன?

5. மாத்தறை மத்திய கல்லூரியின் ஒன்றுகூடல் ஒன்றின் இறுதியில் 10 பேர் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி கொண்டனர். மொத்தமாக இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?

விடைகள் அடுத்த இதழில்.....